அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 08/92

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம் - கொழும்பு. 7
1992, பெப்புருவரி மாதம் 19ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள், மாகாண அரசாங்க சேவை
ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,
ஆளுநர்களின் செயலாளர்கள்,
அரசாங்க கூட்டுத்தாபனங்களின், அரச உடைமையாக்கப்பட்ட
தொழில் பொறுப்பேற்புகளின், அரசாங்க உடைமையாக்கப்பட்ட
கம்பனிகளின் தலைவர்கள் / தகுதிவாய்ந்த அதிகாரிகள் அனைவருக்கும்.

மாற்று பணியாளர்களுக்கு நிரந்தர நியமனங்களை
வழங்குதல்.

மேலே குறிப்பிட்டுள்ள விடயம் தொடர்பில் வெளியிடப்பட்ட 1991 ஒகத்து 14ஆந் திகதியிடப்பட்ட 36/91ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைக்கு மேலதிகமானது.

(2) 1989.05.31ஆந் திகதிக்கு முன்னர் ஆட்சேர்க்கப்பட்டு 1992 சனவரி 15ஆந் திகதி தொடக்கம் நாளது வரை தொடர்ச்சியான சேவையிலுள்ள மாற்றுப் பணியாளர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆயின் பின்வரும் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(1) அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் நியதிகளின்படி பதவிக்கான தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(11) தற்பொழுது வெற்றிடமாகவுள்ள ஒரு நிரந்தர பதவியின் கடமைகளைத் தொடர்ச்சியாக நிறைவேற்றியிருத்தல் வேண்டும்.

(3) இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பதவி நிலைத்தரங்களுக்கு ஏற்புடைத்தானவைகளன்று.

ஒப்பம்: எம். என். ஜுனைட்.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.